**கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக் கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும்

மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபைபயின் மீளாய்வாண்டின் இறுதில் உள்ளபடியான செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது எம்.ரீ.நிவ் டயமன்ட் வெளிநாட்டு கப்பல் விபத்துக்குள்ளானமையால் ஏற்பட்ட சேதத்திற்காக காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ஐ.அ.டொலர் 18.6 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | MT-New Diamond கப்பலின் மூலம் எமது நாட்டின் கடல்சார் சுற்றாடலுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினால் (Expert Committee) தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதிகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்று சட்டமா அதிபரின் ஊடாக குறித்த கப்பலின் இலங்கைக்கான சட்டத்தரணி கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் அதற்குரிய பதில் கிடைத்திராததுடன், வழக்கு விசாரணையின் பின்னரே குறித்த பணத்தை அறவிடுவதற்கான இயலுமை கிட்டும். வழக்கு தீர்ப்பு கிடைத்த பின்னர் சூழல் பாதிப்புக்காக பெற வேண்டிய பணத்தை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனம் தொடர்பில் அக்கறை கொண்டுள்ள தரப்பினருக்காக வெளிப்படைத் தன்மையுடன் சிவில் பொறுப்பானது இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஏப்ரல் 27 ஆந் திகதி | வைப்புச் செய்த நபர்கள் | வங்கிகளின் நேரடியாக |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதியினுள் வங்கிக்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 704,396 தொகையை இனங்கண்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காது, இனங்காணப்படாத மீதியான நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இதுவரையிலும் அடையாளம் காணப்படவில்லை. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று 2022 ஆம் ஆண்டின் வருமானமாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவு வைக்கப்படும் தொகைகளை இனங்கண்டு சரியான கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அதிகாரசபைக்கு சொந்தமான அணு உறிஞ்சும் நிறமாலை ஒளிமானியை பழுதுபார்ப்பதற்காக 2019 திசெம்பர் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட மீண்டெழும் செலவினம் ரூபா 1,215,299 தொகையை மூலதனமாக்கி வருடாந்தம் பெறுமானத் தேய்விடப்பட்டவாறு காணப்பட்டது. இதனால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கிரயம் ரூபா 1,215,299 தொகை, திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 364,589 மற்றும் பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 121,529 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பழுதுபார்த்தல் செலவினங்களை சரியான கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவு சேவை மீட்பு வசதிகளுக்காக துறைமுகங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாது, நாளொன்றுக்கு ரூபா 750 படியாக 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் | அதிகாரசபையின் கணக்காய்வுக் குழுவினால் வழங்கப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் ஆரம்ப விசாரணையொன்றினை மேற்கொள்வதற்கு தற்போது வரிசை அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | விசாரணையொன்றி - னை மேற்கொண்டு, பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ஆண்டு வரையிலும் ரூபா 19,515,500 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவிற்கு உரிய ஆரம்ப விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு 2021 திசெம்பர் 28 ஆந் திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், 2023 பெப்ரவரி 14 ஆந் திகதி வரையிலும் அவ்வாறான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசடைதலை தடுப்பதற்கான அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவு | 2021 ஆம் ஆண்டிற்காக கடல்சார் சுற்றாடல் சபையொன்றினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம், சுற்றாடல் சபையின் அங்கத்தவர்கள் அமைச்சரால் பெயரிடப்படுகின்ற போதிலும், கடந்த மூன்று வருட காலப்பகுதியினுள் அதிகாரசபையானது அவ்வப்போது நான்கு வரிசை அமைச்சுகளுக்கு சொந்தமாக காணப்பட்ட காரணத்தால் சுற்றாடல் சபையின் அங்கத்தவர்களை நியமிக்க முடியாதிருந்தது. தற்போது சுற்றாடல் சபை உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் சுற்றாடல் சபைக்கு அங்கத்தவர்களை நியமித்து குழுவினை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றாடல் சபையினை செயற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | i நிதிப்பிரமாணம் | ரூபா 412,089 பெறுமதியான | MV XPress Pearl கப்பலின் | நிதி கட்டுப்பாட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 135 | 33 மேலதிக நேர கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் முகாமைத்துவ உதவியாளரின் (நிர்வாகம்) அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. | கடமைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்காக விசேட மேலதிக நேர படிகளைச் செலுத்துவதற்கு பொது முகாமையாளரின் / தலைவரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் உதவி முகாமையாளர் (நிர்வாகம்) இனால் கொடுப்பனவு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | அதிகாரத்தினை விஞ்சி செயற்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii | நிதிப் பிரமாணம் 136 | செலவினங்களுக்கு கடப்படுவதற்கு அதிகாரத்தினை வழங்காது 17 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களின் ரூபா 3,283,838 ஆன மருத்துவமனைக் கட்டணங்கள் அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | MV XPress Pearl கப்பலின் செயற்பாட்டு பணிகள் தொடர்பிலான கடமைகளை மேற்கொள்ளும் போது கொவிட் தொற்றுநோய் ஏற்பட்ட உத்தியோகத்தர்களை மருத்துவமனையில் அனுமதித்த காரணத்தால் மேற்கொள்வதற்கு நேர்ந்த இந்த செலவினம் கப்பலின் காப்புறுதி கம்பனியிடமிருந்து மீளளிப்பு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அதிகாரமளிக்கப்படாத செலவினங்களை மேற்கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii | நிதிப்பிரமாணம் 138(8) மற்றும் நிதிப்பிரமாணம் 139(4) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 43 சந்தர்ப்பங்களில் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கியமைக்காக பற்றுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ளாது 07 ஹோட்டல்களுக்கு ரூபா 13,891,140 செலுத்தப்பட்டிருந்தது. | கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் உள்ள சிரமம் காரணமாக, கடற்கரையை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு சேவைத் தேவையின் அடிப்படையில் அருகிலுள்ள ஹோட்டல்களில் தங்கும் வசதிகள் வழங்கப்பட்டன. இந்த செலவுகளை மீளளிப்புக்காக கப்பலின் காப்புறுதி கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அனைத்து கொடுப்பனவுகளும் பற்றுச்சீட்டுகளால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| iv | நிதிப்பிரமாணம் 138 | உறுதிச்சீட்டு சரியாகவும் சகல விதத்திலும் முழுமையாகவும் சான்றுபடுத்தும் உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், 03 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பரிந்துரை செய்யப்படாமலும், 04 | எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகள் நிகழாதிருப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பற்றுச்சீட்டுகளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளமை தொடர்பில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் விசேட விசாரணையொன்று மேற்கொள்ளப்படுவதுடன், | பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உறுதிச்சீட்டுக்கள் தயாரித்த மற்றும் பரிசோதித்தவர்களின் கையொப்பமின்றியும், 07 உறுதிச்சீட்டுக்கள் கோவைகளுக்கான தொடர்பினை குறிப்பிடாமலும், 03 உறுதிச்சீட்டுக்கள் செலுத்திய பெறுமதியை எழுத்தில் குறிப்பிடாமலும், 10 உறுதிச்சீட்டுக்களின் பற்றுச்சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலும் உள்ள போது ரூபா 9,102,629 செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. | தவறு இடம்பெற்றிருந்தால் தாபனவிதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| v | நிதிப்பிரமாணம் 156(2) | MV XPress Pearl வெளிநாட்டுக் கப்பலின் விபத்து காரணமாக 2021 யூன் மாதம் 08 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 140 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்காக வாய்மொழி மூலமான அதிகாரத்தின் அடிப்படையில் புத்தளம் கடல்சார் சுற்றாடல் உத்தியோகத்தருக்கு மற்றும் முகாமைத்துவ உதவியாளர் ஒருவருக்கு ரூபா 834,000 ஆன செலவினத்தில் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து இடர்கள் காரணமாக சேவைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டது. | பிரமாணங்களின் பிரகாரம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட வேண்டும். |
| vi | நிதிப்பிரமாணம் 264 | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது 53 உறுதிச்சீட்டுகளின் ஊடாக செலுத்தப்பட்ட ரூபா 27,850,447 தொகையான ஹோட்டல் பட்டியல்களுக்காக பெறுநர்களிடமிருந்து பற்றுச்சீட்டுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கொடுப்பனவினை மேற்கொண்ட பின்னர் உரிய நிறுவனங்களிலிருந்து பற்றுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் உறுதிச்சீட்டொன்றை கையொப்பமிட்டு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள் கின்றேன். | அனைத்து கொடுப்பனவுகளும் பற்றுச்சீட்டுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| vii | நிதிப்பிரமாணம் 237(அ)(ii) | உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக 169 | நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமையின் | தங்குமிடம் வழங்குவதற்கான தேவைப்பாடு மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஹோட்டல் அறைகளுக்காக ரூபா 1,051,500 செலுத்தப்பட்டிருந்த போதிலும், தங்கிய உத்தியோகத்தர்கள் மற்றும் நிறைவேற்றிய பணி தொடர்பில் உறுதிப்படுத்தப்படவில்லை. | மத்தியில் MV XPress Pearl கப்பலின் செயற்பாட்டு பணிகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை மீளளிப்பு செய்வதற்காக காப்புறுதிக் கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மேற்கொண்ட பணிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| viii | நி.பி.625(அ) மற்றும் (ஆ) | இலங்கையினுள் நுண் பிளாத்திக் பகுப்பாய்வுக்காக அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஐக்கிய இராச்சியத்தின் சுற்றாடல், கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினங்களுக்கான விஞ்ஞான நிலையம் (Centre for environment, Fisheries & Aquatic Science- CEFAS); மூலம் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள 9,391.39 பவுன்கள் (ரூபா 2,610,806) பெறுமதியான உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பதிவேட்டில் உள்ளடக்கி கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | MV X-Press Pearl கப்பலின் கடமைகள் காரணமாக இந்த தகவல்களை தேவையான கணக்குகளில் சீராக்கப்படவில்லை. உரிய முறையில் சொத்துக்களின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்ட பின்னர் குறித்த பெறுமதி 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை பதிவேட்டில் உள்ளடக்கி கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 9(1)(ஆ) | விசேட பணிகளுக்காக பதவிநிலைத் தரமுடைய வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 எனும் உச்ச தொகையின் கீழ் செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட வேண்டிய போதிலும், 05 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்காக 20 சந்தர்ப்பங்களில் ரூபா 109,600 முதல் ரூபா 1,000,000 வரையான பெறுமதிகளில் செயல்நிமித்த உப | பிரதேச அலுவலகங்களின் நிகழ்ச்சித்திட்டங்களுக்காகவும், MV X-Press Pearl கப்பலின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் நிலவிய சூழ்நிலைக்கமைய பணிகளை தொடர்ச்சியான மேற்கொள்வதற்காக எல்லையினை விஞ்சி தேவையான சந்தர்ப்பங்களில் முற்பணங்களை பெற்றுக்கொள்ள அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | முற்பணங்கள் சுற்றறிக்கை எல்லைகளுக்கு உட்பட்டு வழங்கப்பட வேண்டியதுடன், எல்லையினை விஞ்சி செயற்படல் தொடர்பில் திறைசேரியிடம் வினவ வேண்டும். |

கட்டுநிதி
வழங்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 98,304,624 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 50,000,017 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 148,304,641 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் வருமானம் ரூபா 174,706,049 இனால் அதிகரித்திருந்த போதிலும், கடந்த வருடத்தின் ரூபா 214,089,055 ஆன மொத்த செலவினம் மீளாய்வாண்டின் போது ரூபா 537,099,745 வரையிலும் 150 சதவீதத்தினால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சி தொடர்பில் முக்கியமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| XPress Pearl கப்பலுக்கு உரியதாக சேகரிக்கப்பட்ட கழிவுகளை களஞ்சியப்படுத்துவதற்காக வத்தளையில் தற்காலிகமான நிலையத்திலிருந்து பமுனுகம களஞ்சிய நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கு தாமதமடைந்த காரணத்தால் 40 கொள்கலன்களுக்கான தாமதக் கட்டணங்களாக ரூபா 17,934,000 ஆன தொகை மேலதிகமாக செலுத்த நேர்ந்திருந்தது. | கப்பலில் ஏற்பட்ட விபத்துடன் ஆரம்ப சந்தர்ப்பம் முதல் கடல்சார் சூழலில் சேர்ந்த கழிவுகள் இந்த கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த துடன், இந்த கழிவுகளின் பாதகம் ஏற்படுத்தும் CEFAS மாதிரிகள் பரிசோதனைக்கூடத்தில் பரிசோதிக்கப்பட்ட பின்னர் ஒக்தோபர் மாதம் வத்தளையிலிருந்து பமுணுகமவிற்கு கொண்டு செல்லல் ஆரம்பிக்கப்பட்டதால் அந்த கட்டங்கள் செலுத்தப்பட வேண்டியதுடன், இந்த கட்டணங்களின் ஒரு பகுதி இதுவரையிலும் காப்புறுதி நிறுவனத்தால் திறைசேரிக்கு செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை செலுத்துவதற்காக இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது. | தாமதங்கள் மட்டுப்படுத்தப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், காப்புறுதிக் கம்பனியிலிருந்து அனைத்து பணத்தையும் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அவசர இரசாயன பொருட்களின் கசிவின் போது | இலங்கையின் கடற்பரப்பில் இடம்பெற்ற | தேசிய மட்டத்தில் செயற்படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தேசிய மட்டத்தில் செயற்பட வேண்டிய விதம் தொடர்பிலான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்தில் ஏற்பட்ட இரசாயன பொருட்களின் கசிவின் போது ஏற்பட்ட சேதத்தினை உரிய முறையில் முகாமை செய்தமை தொடர்பில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | இரசாயனப் பொருட்களின் கசிவு விபத்துகள், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விபத்துக்களின் மூலமான ஆபத்துக்கள், இரசாயனப் பொருட்களின் கசிவு தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணக்கப்பாட்டினை தெரிவித்தல் போன்ற விடயங்களை நோக்காக கொண்டு தேசிய எண்ணெய் கசிவின் போதான அவசர திட்டம் அபாயகரமான இரசாயனப் பொருட்களின் கசிவு என்பதுடன் ஒருங்கிணைக்கப்பட்டு நாளதுவரையாக்கும் பணிகள் இவ் அதிகாரசபையின் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், அந்த தேசிய திட்டம் உரிய தரப்பினர்கள், நிறுவனங்கள் மற்றும் நிபுணர் குழுக்களுடன் செயலமர்வுகளை நடாத்தி மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கவும், கடல் மாசடைதல் அதிகாரச்சட்டத்தினை திருத்தியமைக்கும் போது இரசாயனப் பொருட்களின் கசிவிற்குரிய சட்டரீதியான ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. | வேண்டிய விதம் தொடர்பில் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதற்கமைய செயற்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு முதல் மீன்பிடித் துறைமுகங்கள் உள்ளடங்கலாக கரையோர வலயங்களில் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 84 உள்ளூராட்சி நிறுவனங்களில் கழிவு முகாமைத்துவக் | நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் குழுவினை தாபிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தற்போது குழு தாபிக்கப்பட்டு களச் சுற்றுலாக்கள் / அவதானிப்புகள் மற்றும் கூட்டங்கள் போன்றன நடாத்தப்படுகின்றன. | கழிவு முகாமைத்துவ குழுக்களின் பணிகளை செயற்திறனாக மேற்கொள்வதற்கும், மின்படித் துறைமுகங்களை அண்மித்ததாக பெருமளவில் காணப்படும் Fiber கழிவு தொடர்பில் |

| | | |
|---|---|---|
| குழுக்கள் நிறுவப்பட்டிருந்த போதிலும், அந்தக் குழுக்கள் உரிய முறையில் கூடியிராமை மற்றும் செயற்திறனாக இயங்கியிராத காரணத்தால் அவற்றிலிருந்து எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறியிராததுடன், மீன்பிடித் துறைமுகங்களை அண்மித்த பெருமளவில் காணப்படும் Fiber கழிவுகள் தொடர்பில் தீர்வொன்றினை வழங்குவதற்கு அதிகாரசபைக்கு இயலாதிருந்தது. | மீன்பிடித் துறைமுகங்களை அண்மித்த பயிபர் கழிவுகளுக்கு இலங்கையில் உள்ள தீர்வானது பயிபர் கிளாஸ் இனுள் எரித்தல் incinerate ஆன போதிலும், அதற்கான ஒரே இடம் புத்தளத்தின் Incee Cement கம்பனி என்பதுடன், அதற்கு அதிக கிரயம் ஏற்படும். அந்த கிரயத்தினை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கொள்வதற்கான இயலுமை காணப்படாததுடன், எமது அதிகாரசபை இதற்கான தீர்வினை தேடுவதில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றது. | தீர்வொன்றினை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடல்சார் மாசுபாட்டினை தடுக்கும் அதிகாரச்சட்டத்தின் 34(அ) பிரிவின் பிரகாரம், சிவில் பொறுப்புக்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2021 மே 21 ஆந் திகதி எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்தினால் ஏற்பட்ட கடல்சார் சுற்றாடல் மாசடைதலுக்கு உரியதாக நிறுவனத்தினால் 2023 சனவரி 09 ஆந் திகதி தயாரிக்கப்பட்டுள்ள இரண்டாவது இடைக்கால அறிக்கையின் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சூழல் பாதிப்பு ஐ.அ.டொலர் 6,483,416,430 தொகையை குறித்த கப்பல் கம்பனியிடமிருந்து அறவிடுவதற்காக 2023 மே 20 ஆந் திகதிக்கு முன்னர் வழக்கு தொடரப்பட வேண்டியதுடன், அவ்வாறு அல்லாத போது சிவில் சட்டத்தின் கீழ் கால | அதிகாரச்சட்டத்தின் 34 ஆம் பிரிவான சிவில் பொறுப்பின் கீழ் விபத்தினால் கரையோரங்கள் மாசடைந்த பிரதேசங்களை சுத்தப்படுத்தல், பொருளாதார பணிகளிற்கு ஏற்பட்ட பாதிப்புகள், ஆதனங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள், சூழலை பழைய நிலைக்கு மாற்றுவதற்கு ஏற்படும் செலவினம் சுற்றாடல் மாசடைதலை பின்ஆய்வு செய்தலுக்காக ஏற்படும் செலவினம் போன்ற செலவினங்கள் கப்பலின் உரிமையாளரிடமிருந்து அல்லது காப்புறுதி கம்பனியிலிருந்து அறவிட முடியும், இந்த கப்பல் விபத்தினால் ஏற்பட்ட சூழல் பாதிப்பினை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் | கால வரையறைக்கு உட்படுவதற்கு முன்னர் சிவில் பொறுப்பின் கீழ் வழக்கு தொடர்ந்து உரிய நட்டஈட்டுத் தொகையினை அறவீடு செய்வதற்கும், செலவிடப்பட்டுள்ள மற்றும் தொடர்புடைய செலவினங்களை காப்புறுதிக் கம்பனியிடமிருந்து மீளளிப்பு செய்வததற்கும் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையறைக்குட்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறான போதிலும், கணக்காய்வுத் திகதியான 2023 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் அந்த வழக்கு தொடரப்பட்டிருக்கவில்லை. மேலும், அதிகாரச்சட்டத்தின் 34(ஆ) பிரிவின் கீழ் இந்த கப்பல் விபத்துக்கு உரியதாக இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் மீளளிப்பிற்காக 2023 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மொத்தப் பெறுமதி ஐ.அ.டொலர் 44.528 மில்லியனாவதுடன், அதனுள் இதுவரையிலும் கிடைத்துள்ள தொகை ஐ.அ.டொ. 6.725 மில்லியன் மாத்திரம் ஆகும். மேலும், ஐ.அ.டொலர் 5.989 மில்லியன் பெற வேண்டியதுடன், எஞ்சியது மதிப்பிடப்பட்ட செலவினமாவதுடன், காப்புறுதிக் கம்பனியால் மறுக்கப்பட்டுள்ளதாகவும், கணக்காய்வுக்கு விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது. | தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கை (1) மற்றும் (2) ஆகியன உரிய நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், விபத்து இடம்பெற்றதன் பின்னர் 2 வருட காலப்பகுதியினுள் சிவில் வழக்கு தொடரப்பட வேண்டும். மூழ்கிய கப்பல் தொடர்ந்தும் அவ் இடத்திலேயே காணப்படுகின்றமையாலும் சூழல் மாசு தொடர்ந்தும் இடம்பெறுகின்றமையாலும் இது தொடர்பில் இறுதி அறிக்கையொன்றினை தயாரிக்க முடியவில்லை. | |
| (ஆ) | அதிகாரச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் MV X Press Pearl கப்பலின் விபத்துக்கு உரியதாக அதிகாரசபையினால் குற்றப் பொறுப்பின் கீழ் வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும், 2023 சனவரி 03 ஆந் திகதி வரையிலும் குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விபத்து ஏற்பட்ட பின்னர் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையினால் பமுணுகம பொலிஸில் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டு உரிய அனைத்து தகவல்களும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் விபத்து தொடர்பான விசாரணைகளுக்காக பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அதிகாரத்தினை வழங்கி விசாரணைகளை மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் உரிய பொறுப்புக்கூற | வழக்கினை கூடிய விரைவில் சாதகமான முறையில் நிறைவு செய்வதற்கு உரிய பணிகள் மற்றும் ஒத்துழைப்புகள் வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வேண்டியவர்களுக்கு எதிராக குற்றத் தாக்கலானது விபத்து இடம்பெற்று 11 மாதங்களின் பின்னரே இடம்பெற்றது. தற்போது அந்த வழக்கானது நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. | |
| (இ) வெளிநாட்டு கப்பலான (X-press pearl) விபத்தின் காரணமாக ஏற்பட்ட சூழல் பாதிப்பினை மதிப்பீடு செய்வதற்காக உரிய மாதிரிகளை பரிசோதிப்பதற்காக வெளிநாட்டு ஆய்வுகூடங்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,332,910 தொகையைத் தீர்ப்பதற்கு கப்பல் காப்புறுதி நிறுவனத்திலிருந்து ஐ.அ.டொலர் 554,045 மற்றும் ஐ.அ.டொலர் 470,614 எனுமாறு இரு சந்தர்ப்பங்களில் மீளளிப்பில் கோரியிருந்த போதிலும், அக் கொடுப்பனவுகள் காப்புறுதி நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிராமையால், அப் பணத்தைப் பெற்றுக்கொள்வதில் நிச்சயமற்ற தன்மை நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இரசாயன ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை மீளளிப்பு செய்வதற்குரிய பரிசோதனைத் தரவுகள் வழங்கப்படும் வரையிலும் காப்புறுதி நிறுவனத்தினால் தாமதிக்கப்பட்டுள்ளது. இரசாயன ஆய்வுகூடத் தரவுகள் மற்றும் அறிக்கைகள் சட்ட காரணங்களின் அடிப்படையில் காப்புறுதி நிறுவனத்திற்கு வழங்கலாகாது என சட்டமா அதிபதி திணைக்களத்தினால் அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்படாத போது கடல் சார் சுற்றாடல் மாசடைதலைத் தடுக்கும் அதிகாரச்சட்டத்தின் 34 ஆம் பிரிவின் பிரகாரம் இச் செலவினங்களை அறவீடு செய்யும் இயலுமை அதிகாரசபைக்கு உள்ளது. | செலவிடப்பட்டுள்ள பணத்தை கப்பல் காப்புறுதிக் கம்பனியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு உரிய பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 செயற்திட்ட அல்லது மூலதனப் பணிகளிலான தாமதங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அதிகாரசபையால் கடல்சார் சுற்றாடல் கட்டமைப்பை பாதுகாத்து, மீளமைத்து மேம்படுத்தி நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான 09 கொள்கைகள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அக் கொள்கைகளை அடைந்துகொள்வதற்கு மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 15 செயற்திட்டங்களின் கீழ் ரூபா 6,665,000 பெறுமதியான 38 பணிகள் திட்டமிடப்பட்டிருந்தன. | பொது திறைசேரியிலிருந்து கிடைத்த நிதியேற்பாடுகள் போதுமானதாக இல்லாதிருந்தமை, பெற வேண்டிய நிதியேற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டமை, சந்தை விலைகளிலான அதிகரிப்புகள், கொவிட்-19 தொற்றுநோய் பரவுதல் அதிகரித்தமை ஆகியவற்றின் அடிப்படையில் மக்களை ஒன்று திரட்டுவதிலான இடர்கள் போன்ற அதிகாரசபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட | செயல்நடவடிக்கைத் திட்டத்தினை கால அடிப்படையில் மீளாய்வு செய்து அதிகாரசபையின் பணிப்பொறுப்பினை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| எவ்வாறான போதிலும், அவற்றுள் 11 பணிகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 08 பணிகளின் செயன்முன்னேற்றம் 50 சதவீதத்தினை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | விடயங்களின் காரணமாக இலக்கிடப்பட்ட செயலாற்றலினை அடைந்துகொள்ள முடியாதிருந்தது என்பதை சுட்டிக்காண்பிக்கின்றேன். | |

### 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| X Press Pearl கப்பலின் விபத்தின் மூலம் கடற்கரையோரத்திற்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு உரிய சுத்திகரிப்பு பணிகளுக்காக பங்குபற்றுவோருக்கு தங்குமிட வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக சரக்குகந்த பிரதேச வளாகத்தில் 2021 மே மாதம் 29 ஆந் திகதி முதல் எழுத்துமூல உடன்படிக்கையின்றி வாடகைக்கு எடுத்து நாளாந்தம் ரூபா 5,500 படியாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,193,500 செலுத்தப்பட்டிருந்தது. | இந்த கடல் மாசு அதிகளவில் இடம்பெற்ற நீர்கொழும்பு களப்பினை அண்மித்த பமுணுகம பிரதேசத்தில் சரக்குகந்த கடலோர வலயத்தின் பிளாத்திக் துகள்களை அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்காக அழைக்கப்பட்ட அதிகாரசபையின் நாடு முழுவதும் அமைந்துள்ள பிரதேச அலுவலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு தங்குவதற்கு மற்றும் உபகரணங்களை பாதுகாப்பாக வைப்பதற்கு இந்த ஹோட்டல் நாளாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டுக்காக அதிகாரசபையின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது. | ஆண்டறிக்கை உரிய காலப்பகுதியினுள் பாராளும்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையினால் 2017 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி | 2021 ஆம் ஆண்டளவில் 1300 $m^2$ ஆன அளவான பவளப்பாறைகள் | 2025 ஆம் ஆண்டின் போது இலக்கினை அடைவதற்குரிய |

நோக்கங்களிடையே 2025 ஆம் ஆண்டளவில் மீளமைப்பதற்கு எதிர்பார்த்துள்ள 6,000$m^2$ பவளப் பாறைகளின் 1,500$m^2$ மாத்திரம் மீளமைக்கப்பட்டுள்ளமையும், புதிய 04 கடல்சார் பாதுகாப்புப் பிரதேசங்களை அடையாளம் காண்பதன் கீழ் செயன்முன்னேற்றம் 01 மாத்திரமே இருந்தமையும், 2030 ஆம் ஆண்டளவில் கடல்சார் சுற்றாடலுக்கு உரிய சர்வதேச உடன்படிக்கைகளை பின்பற்றுதலின் கீழ் இனங்காணப்பட்ட 06 உடன்படிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டிராத காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றின் செயன்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

நிறுவப்பட்டுள்ளன. எவ்வாறான போதிலும், இந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு திறைசேரியிலிருந்தது கிடைக்கும் நிதியேற்பாடு மற்றும் தேவையான மூலப்பொருட்களின் விநியோகத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது என்பதை சுட்டிக் காண்பிக்கின்றேன்.

பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.